செ. வெ. எண். 526 நாள். 16.10.2014

# செய்தி வெளியீடு

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (16.10.2014) நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு, தேசிய நெடுஞ்சாலை அலகு, திட்டங்கள் அலகு, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு, சென்னை பெருநகர அலகு, திட்டம், வடிவமைப்பு அலகு, தரஉறுதி அலகு ஆகியவற்றின் மூலம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவரும் சாலை மற்றும் பாலப்பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில் துறையின் முதன்மைச் செயலாளர், அனைத்து அலகுகளின் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் பங்கேற்றனர்.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் மூலம் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடப்பாண்டில் நிலுவை பணிகளில் 993 கி.மீ சாலை பணிகளும் 81 பால/சிறுபால பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 2014–15ம் ஆண்டில் 843 கி.மீ. சாலைகளை அகலப்படுத்துதல், 3204 கி.மீ. சாலைகளை மேம்படுத்துதல், 746 எண்ணிக்கையிலான பாலங்கள் / சிறுபாலப் பணிகள் மற்றும் சாலைபாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளில் 90 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகளை இருவழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் 116 கி.மீ. மாவட்ட முக்கியச் சாலைகளை இடைவழித்தடாக அகலப்படத்தும் பணிகளும் அடங்கும். இதில் ரூ.250 கோடி மதிப்பில் சாலை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஏற்கனவே உள்ள நிலுவைப் பணிகளை விரைந்து முடிக்குமாறும், இவ்வாண்டின் புதிய பணிகளை விரைந்து செயலாக்கத்திற்கு கொண்டுவருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

கடந்த 3 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. பணிகளை துரிதமாக செயல்படுத்தி மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

புறவழிச்சாலைப் பணிகளிள் 36 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றுள் 11 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 3 பணிகள் நடைபெற்றுவருகின்றன. 15 புறவழிச்சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. 7 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட 58 இரயில்வே மேம்பாலப் பணிகளில், தற்போது 29 பணிகள் நடைபெற்று வருகின்றன. 1 பணி (தஞ்சாவூர்) முடிக்கப்பட்டு 28.8.2014 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. 3 பணிகள் ஒப்பந்த நிலையிலும், 13 பணிகள் மதிப்பீட்டு நிலையிலும் எஞ்சிய 12 பணிகள் வடிவமைப்பு நிலையிலும் உள்ளன. வரும் மார்ச் 2015க்குள் 13 இரயில்வே பாலப்பணிகள் முடிக்கப்பட்டுவிடும்.

நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகின் மூலம் கட்டப்பட்டு வரும் பாலங்கள் மற்றும் இந்நிதியாண்டில் நபார்டு நிதி உதவியுடன் கட்டப்படவுள்ள 100 பாலப்பணி மற்றும் சாலைப்பணிகளை விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

பாலம் கட்டுமான வடிவமைப்பினை துரிதமாக ஆய்வு செய்து உடனுக்குடன் ஒப்புதல் வழங்க அறிவுறுத்தினார்.

பருவ மழைக்கு முன்பாக அனைத்து சாலைகளையும் நொடிகள் இன்றி பராமரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

பசுமையான சாலைகளை அமைப்பதின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு வருகின்ற வட கிழக்கு பருவமழை காலத்தில் தேவையான இடங்களில் மரக்கன்றுகளை நடுவதற்கு தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி கால்வாய்கள் தூர்வாருதல், உயரமான மண்புருவங்களை சமன் செய்தல், அடிக்கடி வெள்ள பெருக்கு ஏற்படக்கூடிய தாழ்வான பகுதிகளை கண்டறிதல், தரைப்பாலங்களில் வெள்ள அளவு கோல்கள் அமைத்தல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு கோட்டத்திலும் 24 மணி நேர கட்டுபாட்டு அறை அமைத்திடவும் தயார் நிலையில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

தற்போது மாநிலத்தில் நடைபெற்றுவரும் சாலைப்பணி, ஆற்றுப்பாலங்கள், சுற்றுச்சாலை, வட்டச்சாலை மற்றும் புறவழிச்சாலை ஆகிய பணிகளை துரிதப்படுத்தி சிறந்த முறையில் மேற்கொள்ளவும், நிலம் கையகப்படுத்தும் பணிகளில் இடையூறு இருந்தால் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய நடவடிக்கையினை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**